# செய்தி வெளியீடு– 19.10.2008

## தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 2007–2008ஆம் ஆண்டிற்கான இலாபப் பங்குத் தொகையாக 6 கோடியே 11 இலட்சத்து 12 ஆயிரத்து 250 ரூபாய்க்கான வரைவு காசோலையை

## முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் வழங்கியது

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 2007–2008ஆம் ஆண்டில் வரிக்குப்பின் 112 கோடியே 83 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டி சாதனை படைத்துள்ளது. இதில், தமிழக அரசுக்கு 20 சதவீத இடைக்கால ஈவுத்தொகையாக 4 கோடியே 88 இலட்சத்து 89 ஆயிரத்து 800 ரூபாய் ஏற்கனவே இந்நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. தற்போது 25 சதவீத இறுதி ஈவுத் தொகையாக 6 கோடியே 11 இலட்சத்து 12 ஆயிரத்து 250 ரூபாய்க்கான வரைவு காசோலையை அந்நிறுவனத்தின் தலைவர் திரு எம்.எப்.பாரூகி, இ.ஆ.ப., அவர்களும், மேலாண்மை இயக்குநர் திரு. முகமது நசீமுத்தின், இ.ஆ.ப., அவர்களும் முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் இன்று வழங்கினார்கள்.

இத்துடன் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 2007–2008ஆம் ஆண்டுக்கான இலாப பங்குத் தொகையாக தமிழக அரசுக்கு மொத்தம் ரூபாய் 11 கோடியே 2 ஆயிரத்து 50 ரூபாய் வழங்கியுள்ளது.

இந்நிகழ்வின்போது, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆ.ப. , ஆகியோர் உடனிருந்தனர்.

* * *